
சைவப் பெரியார் தமிழ் புராணப்படம்

“பரஞ்ஜோதி” (அல்லது) சிறுத்தொண்ட நாயனர்




திருச்சி தஞ்சாவூர் ஜில்லா உரிமை, சதாசிவம் பிக்சர்ஸ், மது...

## —: நடிகர்கள் :—

| | | |
|---|---|---|
| V. A. செல்லப்பா | ... | பரஞ்ஜோதி |
| R. பாலசுப்ரமண்யம் | ... | சிவன், பயிரவர் |
| T. P. ராஜலக்ஷ்மி | ... | நங்கை |
| K. V. ஜெயகௌரி | ... | பார்வதி, பிச்சைக்காரி |
| பேபி மனோஹர் | ... | சிராளன் |
| M. S. முருகேசன் | ... | முருகேசன் |
| ஜோக்கர் ராமுடு | ... | வாத்தியார் |
| E. K. ஆச்சாரி | ... | பல்லவராஜன் |
| சுந்தரி | ... | சந்தனம் |
| N. S. கிருஷ்ணன் | ... | கணக்கன் |
| T. A. மதுரம் | ... | வேலைக்காரி |
| ராமசாமி அய்யர் | ... | சமயல்காரன் |
| M. R. சாமிநாதன் | ... | சத்திராதிகாரி |
| குமாரி கல்யாணி | ... | டான்ஸ் |
| புளிமூட்டை | ... | சமையல்காரன் |
| மற்றும் இதர பிரபல ஹாஸ்ய நடிகர்கள் | ... | இதரபாத்திரங்கள் |

ஸ்டுடியோ:

ஜெயபாரத் மூவிடோன் & நியூடோன்

ரிகார்டிங்: டின்ஷா & மீனாக்ஷி

கியாமரா: ஜித்தன் பனர்ஜி

ஆர்ட்டு டைரக்ஷன்: F. நாகூர்

டைரக்ஷன் & கதைவசனம்: B. S. ராமய்யா

எடிடிங்: T. R. கோபு

மியூசிக் டைரக்ஷன்: S. V. வெங்கட்ராமன்

மியூசிக்: K. V. நாயுடு & பார்ட்டி

பாட்டு:

பாபநாசம் சிவன் & ராஜகோபாலன்

புரொடக்ஷன் மானேஜ்மெண்டு:— V. S. தீக்ஷித்

# "பரஞ்ஜோதி"

அல்லது

## (சிறுத்தொண்ட நாயனார்)

### கதைச்சுருக்கம்.

மகேந்திர பல்லவன் மகலின் படைத்தலைவன் பரஞ்ஜோதியின், கலிங்கத்து வெற்றியைக் கொண்டாடவும், பரஞ்ஜோதி வீர கடகங்கள் அணிவிக்கவும், நாட்டியம் நடக்கிறது. பரஞ்ஜோதி நாட்டியத்தில் யுத்த சம்பவங்களை சித்தரிக்கப்படுவதினால், கலக்கமுற்று யுத்த சம்பவங்களை நினைக்கிறார். மன நிம்மதியில்லாமல் ரகசியமாக மகலைவிட்டு வெளியேறுகிறார். அங்கு சுவற்றில் மாட்டியிருக்கும் மகேஸ்வரன் படத்தைப் பார்க்கிறார். மனம் மகேஸ்வரனிடம் லயிக்கிறது. மன்னன் மகேந்திரன் அங்கு வருகிறார். விசாரிக்கிறார். சேனாதிபதி பதவியிலிருந்து தன்னை விடுவிக்கவும், நான் இனி ஈஸ்வரனை பஜித்து அவன் அடியார்க்கு அன்னமிட்டுத் தொண்டுசெய்யும் பணியில் ஈடுபடப்போவதாகச் சொல்லி விடைபெற்றுப்போகிறார்.

பரஞ்ஜோதியின் மனைவி நங்கை அன்னாரின் வருகையை சந்தோஷமாய் ஏற்க காத்திருக்கும்பொழுது பரஞ்ஜோதி தன் விரதத்தை நங்கையிடம் சொல்ல இருவரும் தினம்; ஒரு அடியாருக்காகிலும் அன்னமிடாமல் ஆகாரம் கொள்வதில்லை என்று விரதம் ஏற்றுக்கொண்டு, ஏழைகளுக்கு அன்னமிட சத்திரத்தையும் நியமனம் செய்தார்.

கைலையில் சிவன் பார்வதி தர்க்கத்தில் பக்தி, பாசம் குறிக்கிட பார்வதி. பாசத்தை வளர்த்து பக்தியை தொடிப்பதாக சபதம் கூறி பிச்சைக்காரியாய் மாறி புறப்படுகிறாள்.

பூலோகத்தில் பிச்சைக்காரி பரஞ்ஜோதியின் முதல் அதிதி. பரஞ்ஜோதிக்கு புத்திரப்பேறு இல்லாததை உணர்ந்து பிள்ளை வரம் கொடுத்து போகிறாள்.

பரஞ்ஜோதிக்கும் ஆண்மகவு பிறந்து சீராளன் என்ற பெயருடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பக்தியில் வளர்ந்து வருகிறது.

கைலையில் சிவன், பார்வதியிடம் "நீ பாசத்தை வளர்க்க அளித்த குழந்தை பக்தியைத்தான் வளர்க்கிறது" என்கிறார். தர்க்கம் ஏற்படுகிறது. முடிவில் ஈஸ்வரன் பரஞ்ஜோதியின் பக்தியை அந்த புத்திரனாலேயே சோதிக்கிறேன் என்று புறப்படுகிறார். மேலும் நந்தியை அனுப்பி அந்த எல்லையில் ஒரு அதிதியேனும் பரஞ்ஜோதியின் இல்லம் செல்லாதபடி போஜனசாலை நியமித்து போஜனமிட ஏற்பாடுசெய்கிறார்.

ஒரு நாள் பரஞ்ஜோதி ஒரு அதிதியேனும் தன்னில்லம் வராததைக் குறித்து வருந்தி அதிதிகளை தேடிப் புறப்படுகிருர். ஒரு அதிதியேனும் கிடைக்காததால் மனம் கலங்கி வீடு திரும்புகிருர்.

இதற்கிடையில் ஈஸ்வரன் பைரவர் ரூபத்தில் பரஞ்ஜோதியின் இல்லம் வந்து நங்கையை சந்தித்து "புருஷனில்லாத வீட்டில் போஜனம் கொள்ளமாட்டோம்" என்று சொல்லி தான் பிள்ளையார் கோவில் ஆத்திமரத்தடியில் காத்திருப்பதாகப் போகிருர்.

பரஞ்ஜோதி வீடுவந்து விபரமறிந்து ஆத்திமரத்தடியில் அதிதியை சந்திக்கிருர், அதிதி, தான் பைரவன் என்றும் நரமாமிச ஆகாரம் சாப்பிடுகிறவரென்றும். அதிலும் முப்பத்திரண்டு லெக்ஷணங்களுமுள்ள ஐந்து வயது பாலனாக இருக்கவேண்டும் என்றும் சொல்கிருர். பரஞ்ஜோதியும் சம்மதித்து வீடுசெல்கிருர்,

நங்கையும் பரஞ்ஜோதியும் இதற்கென்னசெய்வதென்று கலக்கமுற்று முடிவில் தங்களுடைய அருந்தவப் புதல்வன் சீராளனையே ஆக்கிப்படைக்க முடிவு செய்கிருர்கள். சீராளனை பள்ளியிலிருந்து அழைத்துவரச் சொல்கிருர், வரும் வழியில் ஈஸ்வரன் கிழரூபத்தில் சீராளன் மனதை கலைக்கிருர்,

பார்வதி பிச்சைக்காரியாக நங்கையை சந்தித்து மனதை கலைக்கிருள். ஆனால் ஜெயமில்லை போய்விடுகிருள்.

சீராளனின் சிரம் தந்தையின் கையினாலேயே துண்டிக்கப்பட்டு பாகம்செய்து பைரவருக்கு பரமாறப்படுகிறது, பைரவர் பரஞ்ஜோதியையும் சாப்பிட, கூட உட்காரச்சொல்லுகிருர். மற்றொரு இலையும் போட்டு பையனை கூப்பிடச்சொல்ல, பரஞ்ஜோதி கூப்பிடுவதற்கு வரமாட்டானென்று சொல்ல, பைரவர் பிடிவாதமாக கூப்பிடச்சொல்லி, கூப்பிடுகிருள், வெளியில் கூடியிருந்த கூட்டத்தின் மத்தியிலிருந்து சீராளன் வருகிருன் உடனே பரஞ்சோதி, நங்கை, சீராளன் முதலியவர்கள் உள்ளே ஓடி பார்க்கிருர்கள். பைரவர் காணவில்லை பரஞ்சோதி வந்தவர் ஈஸ்வரன் தானென அறிந்து மனமுடைந்து பூஜையுள்ளிற்கு ஓடி லிங்கத்தில் மோதிக்கொள்ள அங்கு ஈஸ்வரன், பார்வதியுடன் காட்சிகொடுத்து பார்வதியிடம் பக்திதான் ஜெயித்ததைக் காட்டி, பரஞ்சோதிக்கும் பலிமதத்தை ஒழித்து பக்திமதத்தை பரவச்செய்ய அனுக்ரஹித்து சிறுத்தொண்டன் என்ற புகழ்ச்சிப் பெயரையும் கொடுத்து மறைகிருர்.

**N. S. கிருஷ்ணன் கணக்குப்பிள்ளை வேலைக்கு வந்து சேர்ந்து வேலை பார்ப்பது என்றும் உங்கள் உள்ளத்தில் மறவாத ஹாஸ்யத்தைக்கண்டு ஆனந்தியுங்கள்.**

சுபம்! சுபம்!! சுபம்!!!

# "பரஞ்ஜோதி"

அல்லது

## (சிறுத்தொண்ட நாயனர்)

### பாட்டுகள்.

1. டான்ஸ்பாட்டு

பல்லவி

போரில் வந்தெதிர் சூரனை ஸம்ஹரித்து
பொன்னுட்ர மலர்மாரி பொழிய தெய்வானையை
புன்னகை தவழ் அறுமுகமுடன் மணந்த
புகழ் முருகனை குமரனை குகனை நிகர்
வீரன் வாழ்கவே (பரஞ்ஜோதி வீரன்)

அனுபல்லவி

வெற்றிமாலை அணிமார்பன் ஜெகதேக
வீரன்வாழ்கவே நமதுபடைவீரன் வாழ்கவே
தோற்ற நெஞ்சமதில் வஞ்சம் பொருமையோடு
தொடர்ந்தெதிர் சிசுபாலன் முதலோரை
காற்றிடைப்பட் டிலவம் பஞ்செனத்தூற்றி
கொடுங்காற்றிடைப்பட்ட இலவம்பஞ்செனத்தூற்றி
மலர்கண்ணன் ருக்மணி காந்தன் எனவரும், வீரன்
வாழ்கவே

2. பரஞ்ஜோதி பாட்டு

பல்லவி

சூழ்வினைக்காய் திரிந்தேன் அந்தோ
(சூழ்வினைக்காளாய் திரிந்த)

அனுபல்லவி

தாழ்சடை சங்கரன் தாழ்மலர் பஜியாமல்
சாந்த சதானந்த அமுதம் புஜியாமல்
(சூழ்வினைக்காளாய் திரிந்தேன்)

சரணம்

மனதில் ஒளிந்திருக்கும் காமாதி துஷ்ட
வைரிகளை கொல்லும் வகையறியேன்
மதம்பிடித்த யானை—நிகரத்த மனத்தை
பிடித்தடக்கவும் சிறிதும் திறமையில்லேன்
இனத்தில் பகுத்தறிவை பறிகொடுத்தளவில்லா
ஜீவன்களை வதைத்தேன் அருள் மறந்தேன்
தேவாதி தேவனை திரிலோக நாதனை
சிந்தை மகிழ்ந்து-ஒரு கணமும் நினையாமல்
(சூழ்வினைக்காளாய் திரிந்தேன்)

## 3. பரஞ்ஜோதி பாட்டு

பல்லவி

ஜெயசம்போ சிவா ஸ்ரீவிபவ
சேயனை யாளும் தேவ தேவா.

அனுபல்லவி

நயகருணா நிதியே—நயகருணா நிதியே நிதியே ஜலநிதியே
நம்பும் அடியார்களை யாண்டவா
பொன்னம்பலனே திருத்தாண்டவா (ஜெய)

சரணம்

உரிமையோடுனது—அன்பர்கள் விரைந்து
ஓடிவந்தேன் இறு மனைதனில் நிறைந்து
அறுஞ்சுவை உணவருந்தி உனைமகிழ்ந்து
அன்புகனிந்து பல ஆசிகள்புரிந்த
திருவருளை தாவா ஒருவர் எனிறைவா
தேவி மலை மகளின் பாகனே சைவ
போக சுகிர்தகுண போகனே (ஜெய)

## 4. பிச்சைக்காரி பாட்டு

பல்லவி

யார் பசிதணிப்பார் அனாதைக்கார் பசிதணிப்பார்
வறியாள் என்—வயிறார எனக்கார் பசிதணிப்பார்.

அனுபல்லவி

சோர்வால்—தடுமாறி
சுயபோதமிழந்தேன் நான்
பார்மேல் நடமாடி வரும் பரதேசி எனைநாடி
(எனக்கார் பசிதணிப்பார்)

சரணம்

தருமமொன்று—அல்லாதே—வேறு
ஒரு துணையும்—நில்லாதே
இதுவே—நிஜமே (எனக்கார் பசிதணிப்பார்)

தன்னைமீறிய தானம்—தருமா அறியாயோ
அணைமீறிய வெள்ளமே-- ஓடோடி ஒடுங்குமோர்பள்ளமே
அதனால் இலையே நலமே (எனக்கார் பசிதணிப்பார்)

## 5. நங்கை பாட்டு

தாலாட்டு

அணையா விளக்கே பேர்சொல்லும்
அரசே தமிழ் நாடா
இணையே துனக்கே மாசில்லா
அழகான சீராளா
வானுலாவி வீசு மா மதி
முகமேன உலகில் பிள்ளை
பிள்ளைக்கலி தீர்த்தாண்டிடும்
பேராளனே வாடா
முல்லைமலரே வாடிடா
முதிரா இளங்கோவே
தேரிலேவரும் மூர்த்தியே
திகட்டாத தெள்ளமுதே
கருணாலயமே மாதவ கனியேருண—சீலா.

6 ## சீராளன் பாட்டு

மனோகரா மா தேவா
மரகதசிலை என வளருமை
கணவனே [மனோ]

மானாடிட மழுவாட
மதியுமாட புனலாட
நடனமிடு முனது
பதமலர் தோழவருள்
மார்க்கண்டன் தனக்கன்று மனமிரங்கி. (மனோ)
மார்பீதுதைத்த மறைமுதலே
சிறுவர்களெமக்கிரங்கி.
திருவருளாதாரமே தருவாய்
பரமபுருஷனே பசுபதி சரணம்.

## காமிக் பாட்டு

பாக்கியவதியவள்
பக்கத்திருந்தாலும்
பாபமெல்லாம் பறந்தோடும்
பால்வடியும் ; முகம்
பார்த்தாலும் போதும் சௌ
பாக்கியம் வந்து விளையாடும்
வாக்கால் அவள் மழை
பெய்யென்றால் பெய்யும்
வர்ணிக்க யாராலே கூடும்
வரமாட்டேன் என்றவள் சொல்லியதாலே
வருத்தத்தை நீர் தள்ளிப்போடும்.

7 ## பைரவர் பாட்டு

திரிலோக—ரக்ஷாதிகாரி.
திரிநேத்திரதார்—பிக்ஷாடராக பாரீர்
ஜெய ஜெகதீசன்—கைலைவாசன்
ஜெகமதில் வருவதும் பாரீர்
நாயகன் தன்தாபம் திரலேயாரோ
தாயகன் தன்னருள் தானடைந்தாரோ (ஜெயஜெய)

அண்ட சராசரம் கண்டு இதோ
அஞ்சி நடுங்கி ஒடுங்கிடவே
ஆதி பராபரம் வாரான் கோலங்கொண்டு
கொடுங்கால பயிரவனாய் (ஜெய ஜெய்)

## காமிக் பாட்டு

(வ) இனியிங்கு நில்லாதே
உனடுதண்ணாஞ் சொல்லாதே.
தனிமையில் நானிருக்க
(வ) தவறாய் நினையார் ஊரார் [இனியிங்கு]
(க) வள்ளியுன் ஆசையே
வருத்துதென் மனசையே
கள்ளத்தன மொன்றுமில்லை.
கண்ணின் இனிநான் உனக்கே [இனியிங்கு]
(க) கடைக்கண்ணால் பார்த்தாயே காரணம் யாது
(வ) கருணையும் உள்ளவனென்று நினைத்தது தீது
(க) அணைத்து பிடித்து மனத்தைகெடுக்க
உனை மறப்பதெப்படி
(வ) அண்ணன் என்று எண்ணியுலகில்
அவதிப்படுவதிப்படி
(க) அண்ணனா
(வ) ஆமா.

## 8. பரஞ்ஜோதி பாட்டு

### பல்லவி

ஸாம்ப சதாசிவ!—சங்கரா சரணம்
சங்கடம் தவிர்ப்பாயென் ஸர்வதயாபரா.

### அனுபல்லவி

ஆம்பல் நிகர்த்த கண்ணாள் அம்மைஎன் உமைபாகா
பாம்பெல்லாம்—குருகிற்ற பாபம்
என்செய்தேனோ (ஸாம்ப)

## 9. சோளன் ⁓ நங்கை பாட்டு

பல்லவி

சோமஸுந்தரா  தேவா
ஹே கெங்காதரா  வா வா.

அநுபல்லவி

ஓ மஹேஸ்வரா  நாதா
மன்றுளாடிய  பாதா.

சரணம்

தீன  நாதனே  தேவா
ஞான  பூதனே  வா வா
மீனலோசனி  நாதா
வானவர் புகர்  மேதா  (சோம)

## 10. பரஞ்ஜோதி பாட்டு

பல்லவி

என் மகன் என்பொருள் என்றே
மாயபாசம் கொண்டே
சொன்ன சொல்தவறாமல் நன்றே தேவாசம்போ
உன் திருமலரடியே சரணம் தயாளா
உன்னருளல்லால் உலகுயிர் வாழ்வேது
(நின் திருமலரடி)

உன் திருவிளையாடல் நானறியேனே
சஞ்சலமாகி ஏழை நெஞ்சம்
உருதி தளறுதிடமருள்—தேவா  (நின் திருமலரடி)

## 11. நங்கை பாட்டு

ஏழை நானறி யேன்
வாழை ஈன்ற குறுத்தருப்பாறே
பாவம் இது உனக்கேனோ  (ஏழை)

சேய்கன் பல பேரறிந்தும் உலகில்
நீ மலருதானே அதுபோல்
யானும் மாடல்லவே
காணும் யாவும்
கனவோ நினைவோ
கருணை குணக்குடி வாழ்வே........ஆ (ஏழை)

12 சிராளன் பாட்டு

பாக்யமே—பாக்யமே
எவருமடைந்திடாத
பரமனருளால் நாளிதே
எனதுடலிதனை ஈந்து நான்
உணவாகவே நேர்ந்ததே
பெற்றவர் மனதினும் பெரிதொன்றில்லையே
பிறவிப்பயனீதே ஈசனே
பேரருள் பெற சுகமே தந்தையுமென்
தாயுமீடோ வேண்டினேன் மிகவே (பாக்யமே)

13 பரஞ்ஜோதி பாட்டு

அருங் குலக்கொழுந்தே வா
அரனடியார் விருந்தே வா
பிள்ளை கலி தீர்க்கவந்த பேருளா வா
பேராளா சிராளா சிராளா.

14. பரஞ்ஜோதி பாட்டு

அருளாளன் எனை ஆளவந்தாரோ
அடிமை எனை சோதனைசெய்தாரோ (அருளாளன்)
தெரிசனம் செய்யுமுன் ஏன்மறைந்தாரோ
சேவுயர் அம்பலவாணனை காணேனே
அருளாளா அருளாளா அருளாளா.

---

ஸ்ரீ ஸ்வர்ணாம்பிகா பிரஸ், மதுரை, Q. H. No. 107, 8-2-48-10000.




# N. S. கிருஷ்ணன்
# T. A .மதுரம்

இதர பல ஹாஸ்ய நடிகர்கடளுன் சேர்ந்து நடிந்து
கடைசியாக வெளிவந்துள்ள
வயிறு குலுங்கச் செய்யும் ஹாஸ்யம்
கண்டு களியுங்கள்.